முருகப்பெருமான் துணை

**மகான் தானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.07.2023, செவ்வாய்கிழமை

1. யோகராஜனே தேசிகா வாழ்க
உண்மை நிலை மக்களடைய
வகையான ஞானம் அருளுகின்ற
வள்ளலே ஆறுமுக அரங்கா
2. அரங்கனே உன்பெருமை கூறி
அறிவிப்பேன் அறிவுரை ஆசி
வரங்களென சோபகிருது மிதுனதிங்கள்
வல்லமைபட இருபானாற்திகதி குசன்வாரம்

(சோபகிருது வருடம் ஆனி மாதம் 26ம் நாள், 11.07.2023, செவ்வாய்கிழமை)

3. வாரமதில் தானந்தர் யானும்
வையகம் வளமுற உரைப்பேன்
சோரம் வெல்ல தான தருமமுடன்
சுத்த சன்மார்க்க நெறிகாட்டும்
4. நெறிகாட்டும் அரங்கன் வழியே
நிலவுலகை மாற்றும் தனிவழியாம்
அறிவுத்தெளிவு ஞான பலமுற
அனுகி அரங்கன் திருவடிபற்றி
5. பற்றியே கடைபிடித்து வர
பாமரரும் அறிகின்ற வண்ணம்
ஆற்றலை கொண்டுச் செல்ல
அரங்கன் சீடர்களென இனிதே
6. இனிதே அடையாளம் கண்டுவிட
இவ்வுலகில் ஞான பலமும்
துணிவுபட அரங்கன் துணைபட
தெரிவிப்பேன் அனைவருக்கும் சித்தியாகி

7. ஆகியே உலகமாற்றம் தானும்
அரங்கன் அவதார மகிமையால்
மகிழவே மக்களெல்லாம் காண
மண்ணுலகம் ஞான ஆட்சிகாணும்
8. காணவே அரங்க மகானின்
கருணைமிக்கத் தொண்டர்படை
ஞானமாகப் பெருகி வர
ஞானபண்டிதன் மனமகிழ்ந்து
9. மகிழ்ந்துமே கலியில் வெளிப்பட
மார்க்கமுடன் எங்கும் தலைமை
அகிலத்தில் ஞானிகள் ஆட்சியாக
ஆற்றல்மிக்க ஞானசித்தர் காலமாக
10. ஆகவே மாற்றம் கண்டு
ஆறுமுகப் பெருமானே ஆளும்
யுகமாக ஞானயுக மாற்றம்
உருவாகி அரங்கன் அவதார
11. அவதார நோக்கம் பூர்த்தியாகும்
அகத்தியர் சன்மார்க்க சங்கம்
அவனியெங்கும் கிளைகளாகப் பரவி
அருந்தர்மமும் வளர்த்துமே வளமாக்கும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–